ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2456/61 - 2025 ඔක්තෝබර් මස 03 වැනි සිකුරාදා - 2025.10.03

*2456/61 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தஞ் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்

**தத்துவங்கள் கையளிப்பு**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும், திருத்தஞ் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா. வேதநாயகன் ஆகிய நான், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாக நியமிக்கப்பட்டிருக்கும் செல்வி செகராஜா அகல்யா அவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும், 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தஞ் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினாலும், அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினாலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை தற்போதுள்ள அவர் தம் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்துள் 2025.08.25 ஆந் திகதியிலிருந்து பிரயோகிக்க இக் கட்டளை மூலம் கையளிக்கின்றேன்.

**நா. வேதநாயகன்,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

EOG 10-0035

1A - PG 7276 — 14 (2025/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*